## ஜெயகாந்தன் குடும்பம்

மோதி எஸ்.ராஜகோபால்,
திருச்சி

நாம் வாழும் காலத்திலே வாழும் உன்னதமான மனிதர், எழுத்தாளர் திரு.ஜெயகாந்தன். என்னுடைய வாழ்க்கையிலே பெறற்கரிய பேறுகள் பல பெற்றதற்கு ஜெயகாந்தன் அவர்களை நண்பனாய் அடைந்தது அடையாளம் ஆகும். ஜேஸீஸ், ரோட்டரி, மெஸானிக் லாட்ஜ் என்று பல அகில உலக சங்கங்களிலே எனது தொடர்பினால் பெற்ற வெளியூர் நண்பர்கள், என் வீட்டுத் திருமணத்திற்கு வருகை தரும் எண்ணிக்கையை விடவும் அதிக நண்பர்கள் ஜெயகாந்தன் அவர்களது நட்பினால் வருகை தருவார்கள். காலத்தின் கட்டாயம் காரணமாக நான் இவரது படைப்புகளை வெளியிடும் பப்ளிஷராகவும் இருக்க நேர்ந்தது என் நல்வினைப்பயன் என்று உணர்கிறேன். Friend, Philosopher and Guide என்று இவரை உரிமையுடனும் பெருமையுடனும் கூறுவதில் பேறுவகை கொள்கிறேன். நல் இலக்கியம் வாழ்வில் தாக்கம் ஏற்படுத்தும். அப்படி எனக்குத் தாக்கம் இவரது எழுத்துக்களால் நேர்ந்தது. அவருடைய நட்பு எனக்கு வாழ்க்கையின் அர்த்தத்தை உணர்த்தியது.

பள்ளிப்படிப்பு, அதிகம் கிடைக்க வாய்ப்பில்லாத எனக்கு சுய முயற்சியினால் எந்தக் கல்விமானுக்கும்

இணையாகக் கலைகளில், இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு என்னை நான் நன்கு பயன்படுத்திக் கொள்வதற்கு இவர் நட்பே எனக்கு உறுதுணையாக இருந்தது. Gospel என்ற ராமகிருஷ்ணபரமஹம்ஸர் வாழ்விலே நிகழ்ந்த நிகழ்ச்சிகளை உடன் இருந்த மகேந்திர நாதர் எழுதிய குறிப்புகளைப் படிக்கும்போது எனக்கு இவருடன் இருக்கும் அனுபவமே ஏற்படும்.

ஜெயகாந்தன் குடும்பம் மிகப் பெரிய குடும்பம். அதன் எண்ணிக்கையை நண்பர் ஜெயகாந்தன் மட்டுமே சொல்லக் கூடும். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் நானும் ஒருவன் என்பதை நினைக்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் ஏற்படுகிறது.